# ஏமாறாதீர்கள் மக்களே ஏமாறாதீர்கள்

நீங்கள் தூங்கிவிட்டீர்கள் என நினைத்து தமது கபட நாடகமாக 'பொங்குதமிழ்' என்ற போர்வையில் உங்களை ஏமாற்ற மீண்டும் மீண்டும் வருகிறார்கள் .

கனடாவில் " பொங்குதமிழ்" செய்யவேண்டியதன் அவசியம்தான் என்ன?

எமக்கொரு நாடு கிடைத்துவிட்டதா? அல்லது தேசியத்தலைவர்தான் வந்துவிட்டாரா?

நாம் பொங்குதமிழ் செய்வதற்கு, தமிழ் மக்களின் அடி மனதில் இருக்கும் மிக உன்னதமான உணர்ச்சியின் மறுவடிவமே இந்தப்பொங்குதமிழ் மாவீரர் நிகழ்விற்கு நிகரான இந்த பொங்குதமிழின் ஆழக்கருத்தினை அறியாதது மட்டுமன்றி, கனடா மற்றும் உலக நாடுகள் எமது மக்களுக்காக குரல் கொடுக்கும் இந்நேரத்தில் தமது சுயலாபத்திற்கு தமிழ் மக்களை ஏமாற்ற முனைபவர்களை என்ன செய்யலாம்? நீங்களே முடிவெடுங்கள் மக்களே.

பொங்குதமிழ் நிகழ்வை நடத்துவதன் மூலம் தமது இருக்கைகளை தக்க வைத்துக் கொள்வதற்கும், உங்களை ஏமாற்றி பணத்தைக் கறப்பதற்குமே செய்கிறார்கள். தமிழ், கமல், அருமருகன் (அருமை), நேரு போன்றவர்கள் உங்களை நேரில் ஏமாற்ற முடியாது என்பதை உணர்ந்து, புதிய யுக்தியாக தமிழர் தேசிய அவை, மக்களவை, இளையோர் அமைப்பு ஆகிய போர்வைகளுடாக வருகிறார்கள்.

## அவதானம்! அவதானம்! அவதானம்!

கனேடியத் தமிழ் மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்ட **C.T.R, C.M.R.** வானொலிகளை விடுதலை அமைப்பானது மௌனித்ததன் பின்னர் தனது குடும்ப சொத்தென உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கும் **Stan Antony**யும் அவரது சகா ஜெயராமனும் இவர்களுடன் சேர்ந்து கொண்டு தமிழீழப் போராட்டத்திற்கும், நாடுகடந்த தமிழீழ அரசிற்கும் எதிராக **C.T.R. C.M.R.** வானொலியில் பிரச்சாரம் செய்கிறார்கள். இப்பிரச்சாரத்தின் மூலம் மக்கள் ஏமாந்து விட்டார்கள் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் இவர்களுக்கு மக்களின் சக்தி என்னவென்று காட்ட வேண்டியது காலத்தின் கட்டாயம். கோடைகாலத்தில் மக்களின் வானொலிகளான **C.T.R, M.T.R** நடாத்திய நட்சத்திரவிழாவின் கணக்குவழக்குகள் யாருக்குக் காட்டினார்கள்.



ஸ்ரான் அன்ரனி



ஜெயராமன்



ராகவன்

எமது விடுதலை அமைப்பையும் தேசிய தலைவலரையும் பயங்கரவாதிகள் என அறிக்கை விட்ட ராகவன் என்பவரை மக்களின் சொத்தான **CTR, CMR** வானொலி நிறுவனத்தில் **$75,000** டொலர் சம்பளம் கொடுத்து வேலைக்கு வைத்திருக்கும் மர்மம்தான் என்ன?

ஐக்கிய நாடுகள் சபை முன்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட கவனயீர்ப்பு நிகழ்ச்சியை தாங்களும் (தமிழர் தேசிய அவை, இளையோர் அமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கைக்கூலிகளான ஜனநாயக அணி) சேர்ந்து செய்ததாக பொய்ப் பிரச்சாரங்கள் செய்தார்கள். இப்பிரச்சாரத்தை **C.T.R. C.M.R.** வானொலிகளில் அறிவித்த லின் மூலம் மக்களுக்கு அறிவித்தார்கள். ஏன் இந்த **C.T.R. C.M.R.** வானொலிகள் மக்க ளைக் குழப்புகிறார்கள்? ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்பாக எமது மக்களைப் போக விடாமல் குழப்பியதற்கு **C.T.R. C.M.R.** வானொலிகளின் உரிமையாளர் என்று கூறிக் கொள்ளும் **Stan Antony** இலங்கை அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு பணத்தை பெற்றுக் கொண்டார்? உலகமெலாம் பரந்து வாழும் தமிழ் மக்களே **C.T.R. C.M.R.** வானொலிகளுக்கு செய்திகளையோ விளம்பரங்களையோ கொடுக்காதீர்கள் என தமிழீழத்தையும் தேசியத்தை யும் நேசிக்கும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழீழத்தை நேசிக்கும் தமிழர்களால் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தைத் தவிர வேறு எந்த அமைப்புக்களும் (தமிழர் தேசிய அவை, மக்களவை, இலங்கை உளவுத்துறைக்கு வேலை செய்யும் ஜனநாயக அணி) தேவை இல்லையென உறுதி எடுத்துக் கொள்வோம். இளையோர் அமைப்பு என்ற பெயரில் எமது இளையோரை தவறான பாதையில் இட்டுச் செல்வதை நிறுத்த வேண்டும் (மூன்று இளைஞர்கள் இவர்களின் தவறான வழிநடத்தலினால் இன்று தமது வாழ்க்கையை தொலைத்து விட்டார்கள் என கடிதம் மூலம் மக்களுக்கு அறிவித்துள்ளார்கள்) மக்களின் பணத்தில் சுகபோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ், கமல், அருமருகன் (அருமை), நேரு மற்றும் ஜனநாயக அணி என்ற போர்வையில் இலங்கை அரசின் பணத்தில் நாடகடந்த தமிழீழ அரசையும் தமிழீழப் போராட்டத்தையும் அழிக்க முனையும் ஆறு தமிழினத் துரோகிகளையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் எமது சமூகத்தில் இருந்து ஒதுக்கி வையுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

வணிக விளம்பரநூல், மற்றும் உலகத்தமிழர், புலத்தில் பத்திரிகைகளில் வரும் விளம்பர தாரர்களைப் புறக்கணியுங்கள். இவ்விளம்பரதாரர்கள் எமது தேசிய நோக்கத்திற்கு எதிராக செயற்படும் தமிழ், கமல், அருமை, நேரு, காந்தன், ஈசன் போன்ற தமிழீழ துரோகிகளுக்கு பண உதவி செய்கின்றனர். அத்துடன் இப்பத்திரிகைகளை உங்கள் வர்த்தக நிலையங் களில் வைக்கவிடாது தடுத்து மக்களாகிய நாம் இத்துரோகிகளை புறந்தள்ளுவோம்.

வெகுவிரைவில் தமிழ், கமல், அருமருகன், நேரு, காந்தன், ஈசன் பற்றிய விபரங்கள் ஆதாரங்களுடன் வெளிவரும்.

மாண்டவீரர் கனவு பலிக்கும் மகிழ்ச்சிக்கடலில் தமிழ்மண் குளிக்கும்